(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குள் வந்தபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் மேசையைத் தட்டி வரவேற்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வசதி, கழிப்பிட வசதி ஆகியனவும் செய்து தரப்பட்டு வருகிறது. எனவே, இங்கே தனியாக பக்தர்கள் தங்கும் இடவசதி வேண்டும் என்ற கோரிக்கையை, வருங்காலத் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 323, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

323—

பூங்காக்கள் அமைத்தல்

***7090 திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ரோசல்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பூங்காக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

2015 செப்டம்பர் 22]

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ரோசல்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பூங்காக்கள் அமைக்க போதுமான இட வசதி இல்லை என்பதால், பூங்காக்கள் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்த காரியம் யாவிலும் வெற்றி, எங்கு நோக்கினும் வெற்றி, மற்றாங்கே விடுத்த வாய்மொழிக்கெங்கினும் வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) என்று திரும்பிய திசையெல்லாம் வெற்றி முத்திரை பதித்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நல் வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் இதயம் இருப்பது, வளர்ச்சி பெற்ற கிராமங்களில் என்றார் அண்ணல் காந்தி அவர்கள்.* Providing Urban amenities in Rural Areas (PURA) *என்ற டாக்டர் அப்துல் கலாமின் கனவுத் திட்டத்திற்கு உரு கொடுத்து, தாய் திட்டம் மூலமாக குக்கிராமங்களிலும் உட்கட்டமைப்புகளை உருவாக்கி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*

நூறு ஆண்டு கண்ட விருதுநகர் நகரின், விரிவாக்கப் பகுதிகளான ரோசல்பட்டி, கூரைக்குண்டு, சிவஞானபுரம், பாவாலி ஆகிய நான்கு கிராமங்களையும் ஒருங்கிணைத்து, 1,38,000 மக்கள்தொகை கொண்ட அகண்ட விருதுநகர் விரிவாக்கம் சித்தாந்த ரீதியாக (in concept) *ஒத்துக்கொள்ளப்பட்ட இந்தக் காலகட்டத்தில், ரோசல்பட்டி பஞ்சாயத்து, பல டவுன் பஞ்சாயத்துகளைவிட விரிவான கிராமம். 22,500 மக்கள் வசிக்கும் கிராமம். இதில் அண்ணா நகரில், டாக்டர் எம்.ஜி.ஆர். குடியிருப்பில் அதற்குத் தகுந்த நிலத்தை அந்தப் பஞ்சாயத்து மூலமாக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். கடந்த 4 வருடங்களில் இதுவரை 8 பூங்காக்கள் விருதுநகர் தொகுதியில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. டாக்டர் எம்.ஜி.ஆர். குடியிருப்பிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் இருக்கக்கூடிய,*

industrial workers அதிகமாக நிறைந்த இந்த இடத்தில், ஊரக உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் அரசு இந்தப் பூங்காவினை உருவாக்கித் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தமிழகத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சிப் பகுதிகளிலும் ரூ.225 கோடியே 74 இலட்சம் மதிப்பில் 800 பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது, 5 ஆண்டுக் காலத்தில் உள்ளாட்சிப் பகுதிகளில் வெறும் ரூ.66 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் 217 பூங்காங்கள் மட்டுமே அமைக்கப்பட்டன. அதாவது, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினைவிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ரூ.159 கோடியே 61 இலட்சம் அதிகமாக வழங்கப்பட்டு, கூடுதலாக 518 பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ரோசல்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பூங்காக்கள் அமைக்கத் தகுந்த இட வசதியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்துதரும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, பொற்பாதங்களில் சமர்ப்பித்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 324, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.